**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.472/2022**

**P.W.1**

Deposition of Witness of P.W.1 Solemnly affirmed by of this Court on **25.09.2024** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஜெயக்குமார் | **Father Name** | : | பாலகிருஷ்ணன் |
| **Caste** | : | | **Religion** | : | |
| **Village** | : | | **Taluk** | : | |
| **Calling** | : | | **Age** | : | |

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் வழக்கில் வாதி. வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். 22.09.2019 ம் தேதி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமாகிய பாலன் என்ற பாலதண்டாயுதபாணி எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 08.07.2005 தேதியிட்ட பாலன் என்ற பாலதண்டாயுதபாணி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் பெயரிலுள்ள தான செட்டில்மென்ட் ஆவணத்தின் இணையவழி சான்றளிக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 26.04.2013 ம் தேதி பாலன் பாலதண்டாயுதபாணி பெயரிலுள்ள தான செட்டில்மென்ட் ஆவணம் இணையவழி சான்றளிக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். திருப்பாலை கிராமம் சர்வே எண்.60 க்கு கட்டுப்பட்ட வில்லங்க சான்றிதழ் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். மதுரை தல்லாகுளம் கிராம T.S.No.2718 ல் கட்டுப்பட்ட வில்லங்க சான்றிதழ் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 04.04.2022 தேதியிட்ட சென்னை மதுரவாயில் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இணையதளத்தில்

பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். (வா.சா.ஆ.6 ஆவணத்தில் வாதி புகார்தாரர் இல்லை என்பதால் அதனை குறியீடு செய்யப்படுவதற்கு பிரதிவாதிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் ஆட்சேபனை செய்யப்பட்டு, அந்த ஆட்சேபனைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>** ஒத்தி வைக்கப்படுகிறது.